**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**A021 இலக்கணம் – 2 (சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2 இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இலக்கண வகையால் சொற்களை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?
2. திணை என்பதன் பொருள் என்ன?
3. காரணப்பெயர் என்றால் என்ன? சான்றுதருக.
4. ஐந்தாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் யாவை?
5. இறந்தகால வினையெச்ச வாய்பாடுகள் யாவை?
6. கண்ணன் என்ற பெயரைப் பகுத்து அதில் உள்ள பகுபத உறுப்புகளைக் கூறுக.
7. எதிர்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?
8. ஒரு வினைச்சொல்லில் இருக்கவேண்டிய முக்கியமான மூன்று உறுப்புகள் யாவை?
9. உவம உருபுகள் எத்தனை வகைப்படும்?
10. எல்லாரும் வந்தார் – இதில் உம்மை என்ன பொருளில் வந்துள்ளது?
11. உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் எத்தனை?
12. நான்கு அறிவு பெற்ற உயிர்களுக்குச் சான்று தருக.

13. ஆறுசுவைகளும் எவ்வகைப் பொருளின் குணப்பண்புகள்?
14. வேற்றுமைத் தொகை எத்தனை வகைப்படும்?
15. மூவகைச் சொற்கள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. இருபால் பொதுப்பெயர் என்றால் என்ன?
2. எச்சம் – குறிப்பு வரைக.
3. உரிச்சொல்லின் இலக்கணம் யாது?
4. கட்டளை வாக்கியம் என்றால் என்ன?
5. பொருள்கோள் என்றால் என்ன?
6. கடுஞ்சூல் – விளக்கம் தருக.
7. கொளல் வினா என்றால் என்ன? எடுத்துக்காட்டுத்தருக.
8. திணைவழு என்றால் என்ன?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) வேற்றுமையின் வகைகள் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

(அல்லது)

(ஆ) பெயர்ச்சொல்லுக்குரிய இலக்கணம் குறித்து விளக்குக?

2. (அ) காலம் காட்டும் இடைநிலைகள் குறித்தெழுதுக?

(அல்லது)

(ஆ) ஆகுபெயர் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கி வரைக.

3. (அ) வினா மற்றும் அதன் வகைகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வாக்கிய வகைகளை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

***